


கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் மதியழகன் எம்.எல்.ஏ., பர்கூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஒப்பதவாடி, மல்லபாடி ,கொண்டப்பநாயனப்பள்ளி உள்ளிட்ட பஞ்சாயத்துகளை சேர்ந்த 30 க்கும் மேற்பட்ட கிராமங்களில் கழகத் தலைவரின் ஐந்து ஆண்டு சாதனைகளை கூறி வாக்கு சேகரித்தார் . உடன் மாநில தீர்மான குழு உறுப்பினர் வெற்றிச்செல்வன், மாவட்ட அவை தலைவர் நாகராஜ் , பொருளாளர் கதிரவன், ஒன்றிய செயலாளர்கள் ராஜேந்திரன், காந்தி, உள்ளிட்ட ஏராளமானோர் உடன் இருந்தனர்



மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதி பெரியசெட்டி பாளையம், 46 புதூர், 46 புதூர் காலனி, கருக்கம்பாளையம், குதிரைப்பாளி ஆகிய பகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர் செந்தில்நாதன் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். வாக்கு சேகரிப்பில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், மொடக்குறிச்சி மேற்கு ஒன்றிய செயலாளர் சு.குணசேகரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



ஒரத்தநாடு சட்டமன்றத் தொகுதியின் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கழக வேட்பாளர் முன்னாள் அமைச்சர் ஆர்.வைத்தியலிங்கம் வாண்டையார் இருப்பு பகுதியில் பொதுமக்களிடம் திராவிட மாடல் அரசின் சாதனைகளை எடுத்துரைத்து வாக்கு சேகரித்தார். உடன் முன்னாள் எம்..எல்.ஏ எம்.இராமசந்திரன், ஒன்றியச் செயலாளர் கு.செல்வராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் உள்ளனர்.



அந்தியூர் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் எம்.சிவபாலன் அந்தியூர் தெற்கு ஒன்றியம், புன்னம்பிரிவு, குனியங்காட்டூர், மாலகோவில் தோட்டம், செட்டி குட்டை, கருப்பனங்காட்டு கொட்டாய், பொதியமூப்பனூர் ஆகிய பகுதிகளில் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை எடுத்து கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். வாக்கு சேகரிப்பில் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், அந்தியூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் நாகேஷ்வரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்



நாகை மாவட்டம் வேதாரண்யம் சட்டமன்ற தொகுதி தலைஞாயிறு ஒன்றியத்தில் வேதாரண்யம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் மாமீ புகழேந்தியை ஆதரித்துநாகை மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என் கௌதமன் வாக்கு சேகரித்தார் உடன் கழக விவசாய அணி துணைத்தலைவர் எஸ்.கே.வேதாரத்தினம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், தலைஞாயிறு ஒன்றிய கழக செயலாளர் மகா,குமார்மற்றும் பலர் உள்ளனர்




# தி.மு.க. இளைஞர் அணி

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பரப்புரை சுற்றுப்பயண அறிவிப்பு

2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணிச் செயலாளரும் மாண்புமிகு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பரப்புரை மேற்கொண்டு வருகிறார். நான்கு கட்ட பரப்புரை முடிந்த நிலையில் ஐந்தாம் கட்ட பரப்புரை மேற்கொண்டு வருகிறார். அதன் விவரம் வருமாறு:

**16.4.2026 வியாழக்கிழமை**

| நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|
| காலை 9.30 மணி | மதுரை கிழக்கு | வண்டியூர், சௌராஷ்டிராபுரம், மதுரை. |
| காலை 10.30 மணி | மதுரை வடக்கு | புதூர் பேருந்து நிலையம் அருகில், மதுரை. |
| காலை 11.30 மணி | சோழவந்தான் | பேருந்து நிலையம் அருகில், அலங்காநல்லூர். |
| மாலை 4.00 மணி | ஆண்டிப்பட்டி | பேருந்து நிலையம் அருகில், ஆண்டிப்பட்டி. |
| மாலை 4.45 மணி | போடிநாயக்கனூர் | பழனிசெட்டிபட்டி. |
| மாலை 5.45 மணி | பெரியகுளம் | புதிய பேருந்து நிலையம் பிரிவு, உட்லண்ட்ஸ் ஹோட்டல் அருகில், பெரியகுளம். |
| இரவு 7.15 மணி | நிலக்கோட்டை | கொடைக்கானல் சாலை. அம்மைநாயக்கனூர். |
| இரவு 8.00 மணி | திண்டுக்கல் | நாகல் நகர், திண்டுக்கல். |
| இரவு 8.45 மணி | வேடசந்தூர் | ஆத்துமேடு, வேடசந்தூர். |

அன்பகம்
தேனாம்பேட்டை,
சென்னை – 18
நாள் : 15.4.2026

கலைஞர் 100 1924 - 2023




## திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியில் பொதுக்கூட்டம்:

# திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி சிறப்புரையாற்றுகிறார்!

## அமைச்சர் எ.வ.வேலுவை ஆதரித்து பிரச்சாரம்!

திருவண்ணாமலை, ஏப். 16-

திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியில் வேட்பாளர், அமைச்சர் எ.வ. வேலுவை ஆதரித்து, மாபெரும் பிரச்சார பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி சிறப்புரை ஆற்றுகிறார்.

இன்று (16.04.2026) மாலை 6.00 மணிக்கு திருவண்ணாமலை, அண்ணா சிலை அருகில், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின், திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளரும், பொதுப் பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலுவை ஆதரித்து மாபெரும் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

பொதுக்கூட்டத்திற்கு மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் சி.மூர்த்தி தலைமை வகிக்கிறார்.

காங்கிரஸ் மாவட்டத் தலைவர் கே.குணசேகரன், ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர் சீனி.கார்த்திகேயன், தே.மு.தி.க. மாவட்டச் செயலாளர் வி.எம்.நேரு, சி.பி.எம். மாவட்டச் செயலாளர் ப.செல்வன், சி.பி.ஐ. மாவட்டச் செயலாளர் இரா.திருமலை, முஸ்லிம் லீக் ஐ.எம்.சுலைமான் கான், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர் ச.நியூட்டன், மனிதநேய மக்கள் கட்சி ஏ.ஆர்.நாசர் உசேன், மக்கள் நீதி மய்யம் மண்டலப் பொறுப்பாளர் இரா.அருள், மனிதநேய ஜனநாயகக் கட்சி ஜி.கேட்குமார், எஸ்.டி.பி.ஐ. மாவட்டச் செயலாளர் ஏ.முஸ்தாக் பாஷா, தமிழக முன்னேற்றக் கழக நிறுவனத் தலைவர் கு.ராஜாராம், இந்திய குடியரசுக் கட்சி ஆர்.ஆறுமுகம்,

ஆதித் தமிழர் பேரவை எஸ்.கந்தன், தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் கட்சி பி.வாசு, தலித் விடுதலை இயக்கம் என்.ஏ.கிச்சா, தமிழ்ப்புலிகள் கட்சி எஸ். கண்ணையன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாநகரச் செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள், கழக வேட்பாளரும், அமைச்சருமான எ.வ.வேலுக்கு வாக்குகள் சேகரித்து சிறப்புரை ஆற்றுகிறார்.

நிகழ்ச்சியில் ஒன்றியச் செயலாளர்கள் மெய்யூர் சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், பகுதிச் செயலாளர்கள் சு. விஜி (எ) விஜயராஜ், அ. கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பா.ஷெரீப் மற்றும் கூட்டணி இயக்கத்தின் ஒன்றிய, நகர மற்றும் கிளைக் கழகப் பொறுப்பாளர்கள் கலந்து கொள்கிறார்கள்.

நிறைவாக மாவட்ட துணைச் செயலாளர் பிரியா ப.விஜயரங்கன் நன்றி கூறுகிறார்.

நிகழ்ச்சியினை மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தேர்தல் பணிக்குழு செய்து வருகிறது.



புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் டாக்டர் வை.முத்துராஜா கறம்பக்குடி ஒன்றியதுக்குட்பட்ட அதிரான்விடுதி மற்றும் பல்லவராயன்பத்தை ஊராட்சிகளுக்கு உட்பட்ட கிராமங்களில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். இந்நிகழ்வின்போது கறம்பக்குடி தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் தவ. பாஞ்சாலன், கழக வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.என்.கருப்பையா மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகளும் உடன் இருந்தனர்.